குற்றவியல் நீதித்துறை நடுவர்,விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
எஸ்.டி.சி.02/2020

2021-ம் ஆண்டு நவம்பர் 09 செவ்வாய்கிழமை எதிரி தரப்பு சாட்சியாகிய 2-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.முருகேஸ்வரி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.செல்வம் | வயது | : 58 |
| த/பெ | : ராமன் | தொழில் | : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| ஊர் | : E ¼ போலீஸ் குவாட்டர்ஸ் செவ்வாய்பேட்டை, சேலம் 2 | சமயம் | : இந்து |
| வட்டம் | : சேலம் | ஜாதி | : வன்னார் |
| மாவட்டம் | : சேலம் | | |

<u>முதல் விசாரணை.</u>

நான் 2018-ம் வருடம் முதல் சேலம் மத்திய குற்றபிரிவில் பணிபுரிகிறேன். நான் கொண்டுவந்துள்ள ஆவணமானது மாங்காய் சிறு குறு விவசாயகள் சேலம் மாவட்டம், தமிழக முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய புகார் ஆகும். அது துணை ஆணையாளர் குற்றம் மற்றும் போக்குவரத்து சேலம் அவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. சுமார் 10 நபர்கள் புகாரில் கையெழுத்து போட்டுள்ளனர். மேற்படி புகாரில் விசாரணை அதிகாரி திரு.மரியமுத்து ஆவார். சேலம் மாவட்ட மாங்காய் சிறு குறு விவசாயிகளுக்கு எதிரி HDFC வங்கி காசோலைகள் கொடுத்து அதற்கு ஸ்டாப் பேமெண்டு குறிப்பு கொடுத்து மேற்படி காசோலைகள் திருப்பப்பட்டதால் மேற்படி விவசாயிகள் எதிரி மீதும், எதிரியின் கணவர் ஒரு அண்ணாமலை மீதும் கொடுத்த புகார் ஆகும். மேற்படி புகாரில் விசாரணை அதிகாரி திரு.மரியமுத்து 26.12.2018 அன்று விசாரணை அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனது துறையில் சாட்சியம் அளிக்க எனக்கு கொடுத்த அனுமதி கடிதம் எ.சா.ஆ.2 ஆகும். மேற்படி விசாரணை முடிவு மேற்படி அறிக்கையில் கொடுத்துள்ளார். மேற்படி புகார் எ.சா.ஆ.3 ஆகும்.(மேற்படி விசாரணை அறிக்கை எ.சா.ஆ.4 ஆகும். மேற்படி எ.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ.4 ஆகியவை புகார்தாரர் வழக்கறிஞரால் உண்மை தன்மை கொண்ட ஆவணங்கள் அல்ல என்று ஆட்சேபிக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

எ.சா.ஆ.3 புகார் எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட போது நான் தற்போது உள்ள துறையில் அதே அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். நீதிமன்ற பணிகளையும் கவனித்து கொண்டிருந்தேன். பொதுவாக தமிழக முதல்வருக்கு தனிப்பிரிவுக்கு அனுப்பப்பட்டால் பெறப்படும் புகார்கள் முறையாக அலுவலக முத்திரை பதிக்கப்பட்ட அது சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படும் என்றால் சரிதான். எ.சா.ஆ.3 ல் தமிழக முதல்வரின் அல்லது தமிழக அலுவகத்தின் முத்திரை எதுவும் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக தமிழக முதல்வர் அவர்களுக்கு அனுப்புவதற்காக எந்த புகார் எங்கள் அலுவலகத்திற்கு வந்தாலும், அதற்கு பதிவு செய்ய தனிபதிவேடுகள்

இருக்கிறது என்றாலும், மேற்படி புகார்களில் எங்கள் அலுவலக முத்திரை இட்டு அதற்கு தனி எண்ணும் கொடுக்கவேண்டும் என்றாலும் சரிதான். எ.சா.ஆ.3ல் எங்கள் அலுவலக முத்திரை இல்லை. துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்படும் எண் இல்லை. பொதுவாக துணை கண்காணிப்பாளர் அல்லது இணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்படும் எந்த கடிதமாக இருந்தாலும் அதில் எங்கள் அலுவலக முத்திரை இட்டு அது பெறப்பட்ட தேதியை குறிப்பிட்டு அதற்கு ஒரு எண் கொடுக்க வேண்டும் என்றாலும், அதை பதிவேட்டில் பதிய வேண்டும் என்றாலும் சரிதான். அவ்வாறு பெறப்படும் கடிதங்களில் தனியாக ஒரு தாளை இணைத்து அந்த தாளில் மேற்படி விவரங்கள் பதிவு செய்யப்படும் என்று சாட்சி தாமாகவே கூறுகிறார். எ.சா.ஆ.3ல் சுருக்கொப்பம் இட்ட அதிகாரியின் முத்திரை இல்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.3ல் அனுப்புதல் என்ற குறிப்பில் சரியான விலாசம் இல்லை என்றால் சரிதான். சேலம் மாவட்டம் என்று மட்டும் உள்ளது. புகாரில் கையொப்பம் இட்ட நபர்களில் தந்தை பெயர் மற்றும் விலாசம் காணப்படவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.3ல் காணப்படும் தேதி 15.11.2018 என்றால் சரிதான். எ.சா.ஆ.3ல் உள்ள சுருக்கொப்பத்தில் உள்ள தேதியில் 16 என்று எழுதப்பட்டு அடிக்கப்பட்டு பிறகு 17.11.2018 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.11.2018 தேதியிலே தமிழக முதல்வர், தலைமை செயலகம் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்ட புகார் 16.11.2018 அல்லது 17.11.2018 தேதியிலேயே சேலம் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்ற சங்கதி கற்பனைக்கும் எட்டாத பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. எ.சா.ஆ.3ல் எங்கள் அலுவலகத்தில் என்று மேற்படி புகார் பெறப்பட்டது என்ற குறிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.4 ல் விசாரணை அதிகாரி எந்த இடத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.4ல் ஒரே ஒரு மனுதாரர் பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எ.சா.ஆ.3ல் காணப்படும் பிற புகார்தாரர்கள் பெயர்கள் எ.சா.அ.4 ல் காணப்படவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.4 ல் உள்ள மனுதாரர் முருகேசன் த/பெ. கோவிந்தன் என்பவரின் முழு விலாசம் காணப்படவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.4 ல் பார்வை என்ற குறிப்பில் பேனாவால் எழுதப்பட்டுள்ளதால் எ.சா.ஆ.4 உண்மைதன்மை கொண்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எ.சா.ஆ.4ல் காணப்படும் விசாரணை அதிகாாி திரு.மரியமுத்து தற்பொழுதும் காவல் துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எ.சா.ஆ.4 விசாரணை அறிக்கையை யாருக்கு விசாரணை அதிகாரி சமர்ப்பித்துள்ளார் என்ற விவரம் அதில் எழுதப்படவில்லை பொதுவாக எந்த அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு புகார்கள் அனுப்பப்படுகிறதோ அந்த அலுவலகத்திற்கு விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்போம். பொதுவாக ஒரு கடிதத்தை பிற அலுவலகங்களுக்கு அனுப்பும் போது அதற்கு D.No கொடுத்து அதற்கு உண்டான பதிவேட்டில் பதிந்து அதில் அனுப்பும் அலுவலர் சுருக்கொப்பம் மற்றும் தேதி குறிப்பிட வேண்டிய நடைமுறை விதி

உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எ.சா.ஆ.4 ல் அவ்வாறு குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.4 ல் மேலே பேனாவால் எழுதப்பட்ட சங்கதி நான் எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதியை யார் பேனாவால் எழுதினார்கள் மற்றும் எப்போது எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு எனக்கு தெரியாது. எ.சா.ஆ.3 ல் பக்கம் 1 ல் பேனாவால் எழுதப்பட்டுள்ள குறிப்புகள் யாரால் எப்போது எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பொறுத்து மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அது குறித்த பிறசங்கதிகள் மற்றும் உண்மை தன்மை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். எந்த நபர்களை விசாரித்தனர் மற்றும் என்ன வாக்குமூலங்கள் பெறப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்கள் துறையில் எதிரிக்கு சாதகமான நபர்களை வைத்து எ.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ.4 பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை. இல்லை.

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.